### பதிவு பெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு

# ரூ.3,230 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன!

## அமைச்சர் சி.வி.கணேசன் தகவல்!

சென்னை,டிச.18-

சென்னை, நுங்கம்பாக்கம், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியக் கருத்தரங்கு கூட்ட அரங்கில் தொழிலாளர் துறை அலுவலர்களுக்கான பணித் திறனாய்வுக் கூட்டம் நேற்று (17.12.2025) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையில் நடைபெற்றது. முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன் குமார், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ.வீரராகவராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன், வாரிய செயலாளர்கள், மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், வட்டார தொழிலாளர் இணை ஆணையர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் பேசுகையில், முதலமைச்சர் தலைமையிலான இவ்வரசு அமைப்புசாரா தொழிலாளர் நலனில் அதிக அக்கறை கொண்டு செயல்படும் அரசு. எனவே, தொழிலாளர் துறை அலுவலர்கள் 20 அமைப்புசாரா நல வாரியங்களில் பெறப்படும் கேட்புமனுக்களின் மீது உடனுக்குடன் தீர்வு காணவும், நிலுவை ஏதுமின்றி செயல்படவும் அறிவுறுத்தினார். குறிப்பாக, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி மானியம் தொடர்பான கேட்பு மனுக்களின் மீது தனி கவனம் செலுத்தி சரியான விண்ணப்பங்களை கண்டறிந்து பயனாளிகளுக்கு பயன் கிடைக்கும் வகையில் விரைந்து நடவடிக்கை எடுத்திட அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு தனிநபர் விபத்து நிவாரணம், விபத்து ஊனம், இயற்கை மரணம் / ஈமச் சடங்கு, கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம், வீட்டு வசதித்திட்டம், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் புலம் பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்தில் விபத்தினால் உயிர் இழக்க நேரிட்டால் அவர்களின் உடலை சொந்த ஊருக்கு எடுத்து செல்வதற்கான உதவித் தொகை, தீவிர நோய் பாதிப்பு நலத்திட்ட உதவித் தொகை மற்றும் பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகளில் பங்கேற்பதற்கு ஊக்க உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை உடனடியாக வழங்கிட தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் புதியதாக 24,89,174 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.3,230 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என இக்கூட்டத்தில் அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தொழிலாளர் துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்து அமைச்சர் ஆய்வு செய்தார். தொழிலாளர் துறை அலுவலர்கள் மேலும் சிறப்பாக செயல்பட அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை அமைச்சர் வழங்கினார்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டத்தில் "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி" என்ற தலைப்பில் 235 வது பாக முகவர் கூட்டம் வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் நடைபெற்றது. இதில் மண்டலக் குழுத் தலைவர், பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் கலந்து கொண்டு தேர்தல் பணி குறித்து ஆலோசனைகள் வழங்கினார். இதில் வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன், தினகரன் சண்முகம், பாலாஜி, வெங்கடேச பெருமாள், கா.பிருந்தாவனம் ஜி.குப்புசாமி, எஸ்.முருகன் தமயந்தி இளங்கோவன், புருஷோத்தமன், ஜெயமுருகன், எல்.ஐ.சி.தியாகராஜன், பாலன், பொன். பச்சையப்பன், ஜெகன், சிவா, ராஜஸ்ரீ நந்தகுமார், மனோஜ் மாதவன், ஜே.கே.கோபி, BLA 2, BLC, BDA நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கலைஞர் நகர் வடக்குப் பகுதியில் பாகக் கூட்டங்கள்!

## வே. உமாகாந்த் – ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா – மு.இராசா பங்கேற்பு!

சென்னை, டிச.18-

கலைஞர் நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் மு. இராசா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர் நகர் வடக்குப் பகுதியில் 18.12.2025. அன்று நடைபெறும் பாகக் கூட்டங்களின் விபரம் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் நடைபெறும் பாகக் கூட்டங்களின் விபரம்:-

பாகங்கள் 23, 24, 33, 35, 58 ஆகிய பாகங்களில் தொகுதி பார்வையாளர் உமா காந்த் கலந்து கொள்கிறார்.

இந்தக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். வி. பிரபாகர் ராஜா, வடக்கு பகுதி கழக செயலாளர் மு. இராசா, 127 வட்ட கழக செயலாளர் எஸ். மைக்கேல் மற்றும் பாகங்களில் அடங்கிய BLA 2.BDA.BLC. ஆகிய உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஆர். கார்த்திக் தலைமை! மூ.இராஜேந்திரன் முன்னிலை! மயிலை 123 ‘அ’ வட்டத்தில்

# ‘என் வாக்குச் சாவடி - வெற்றி வாக்குச் சாவடி’ ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்!

சென்னை, டிச.18-

மயிலை 123 ‘அ’ வட்டக் கழகச் செயலாளர் மூ.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்குப் பகுதி 123 ‘அ’ வட்டக் கழகம் சார்பில், தலைமைக் கழகம் அறிவித்தபடி, பாகம் 55-ல் “என் வாக்குச்சாவடி” வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் ஆலோசனைக் கூட்டம், வாக்கு சேகரிக்கவும் இன்று (18.12.2025-வியாழன்) மாலை 6 மணியளவில் குருபுரம் நைனான் தெருவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு ஆர். கார்த்திக் தலைமை வகிக்கிறார்.

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்.

வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் முன்னிலை வகிக்கிறார்.

ஆகவே, நமது வட்டக் கழகத்தின் நிர்வாகிகள், பி.எல்.சி., பி.டி.ஏ. மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



இராயபுரம் மேற்கு மண்டலம் 5 வார்டு 53 இல் பணிபுரியும் ராம்கி துப்புரவுப் பணியாளர் செல்வி வேலை பார்த்து கொண்டு இருக்கும் போது குப்பையில் மனிபர்ஸ் கிடந்தது. அதில் பணமும் இருந்தது உடனே அந்த பணத்தை யூனிட் ஆஃபீஸர் சூப்பர்வைசர் முன்னிலையில் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்தனர். இத்தகவல் அறிந்த மாமன்ற உறுப்பினர் பா.வேளாங்கன்னி துப்புரவுப் பணியாளரின் நேர்மையை பாராட்டி ஊக்கத்தொகை கொடுத்தனர்.


